டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 27.09.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 084 | Madurai | Online Edition

# வன மேலாண்மை திட்ட மேம்பாட்டை வலியுறுத்தி புதுதில்லியில் சர்வதேச பயிலரங்கம்

புது தில்லி, செப்.26

மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், வன மேலாண்மை மேம்பாட்டு திட்டம் குறித்தப் பயிலரங்கத்தை புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமையுடன் இணைந்து நடத்திய இப்பயிலரங்கில், சர்வதேச அளவிலான சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான சவால்களை எதிர் கொள்ளவும், பிரந்தியத் தேவைகளுக்கு ஏற்ப திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் கவனம் செலுத்துவது குறித்தும், சமீபத்திய அறிவியல் அணுகுமுறைகள், நவீனத் தொழில்நுட்பங்களை செயல்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பயிலரங்கை தொடக்கி வைத்து உரையாற்றிய மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ், வனத்துறையில் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையேயான நீண்டகால ஒத்துழைப்பில் இந்தத் திட்டம் முக்கிய மைல்கல் என்றார். மேலும், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கும், பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கும், வனத்தைச் சார்ந்து வாழும் சமூகங்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்கு வனங்கள் இன்றியமையாதவை என்று அவர் வலியுறுத்தினார். செயல்பாட்டு மற்றும் நிர்வாகத் திறனில் வனத்துறை ஊழியர்களின் திறனை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

புதுதில்லியில் நடந்த பயிலரங்கில் மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அதிகாரிகள், துறை பிரதி நிதிகள், ஜப்பான் சர்வதேச முகமையின் அதிகாரிகள், வனத் துறையினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அங்கக வேளாண்மை பயிற்சி நடைபெற்றது

விழுப்புரம், செப்.26

விழுப்புரம் மாவட்டம், வல்லம் வட்டாரம் வேளாண்மை துறை வேளாண்மை விரிவாக்க சீரமைப்பு திட்டம் அட்மா திட்டத்தின் கீழ் சொரத்தூர் கிராமத்தில் அங்கக வேளாண்மை என்ற தலைப்பில் ஒரு நாள் உள் மாவட்ட பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை வல்லம் வேளாண்மை அலுவலர் கார்த்திகேயன் தலைமை யேற்று சிறப்புரையாற்றினார்.



தொடர்ந்து ராஜா தேசிங்கு உழவர் உற்பத்தியாளர் குழு இயக்குனர் பாலு விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள அனைத்து தொழில்நுட்பங்களையும் இயற்கை முறையில் எளிய முறை கடைப்பிடிப்பது பற்றி விளக்கி கூறினார். துணை வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜ் பேசுகையில் மண்வளப் பாதுகாப்பு மற்றும் மண் பரிசோதனையின் அவசியம், அளவுக்கு ஏற்ற உரமிடல் தேவையற்ற உர செலவு ரசாயன உர குறைப்பு பற்றி விளக்கி கூறினார். இயற்கை அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு மற்றும் அதன் பயன்கள் குறித்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுபாஷ் எடுத்துரைத்தார். சொரத்தூர் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் அபிராமி தற்போது வல்லம் வட்டார வேளாண்மை துறை மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் பண்ணை இயந்திரங்கள், விதை மற்றும் இடுபொருட்களின் இருப்பு குறித்தும் பேசினார். இப்பயிற்சியில் சொரத்தூர் கிராம முன்னோடி விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சி ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர் பாலாஜி செய்திருந்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# அந்தியூர் விவசாயிகளுக்கு உயிர்ம வேளாண்மை சாகுபடி குறித்து பயிற்சி



ஈரோடு, செப்.26

ஈரோடு மாவட்டம், வேளாண்மைத் துறை வேளாண்மை தொழில்நுட்ப வேளாண்மை முகமை திட்டத்தின் கீழ் அந்தியூர் வட்டாரத்தில் உள்ள எண்ணமங்கலம் கிராமத்தில் உயிர்ம வேளாண்மை சாகுபடி குறித்த பயிற்சி 23.09.26 அன்று நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் தூ.தே.முரளி தலைமை தாங்கினார். வேளாண்மை துறையில் மானிய விலையில் வழங்கப்படும் விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டங்கள் மற்றும் வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். கீழ்வானி கிராமத்தைச் சேர்ந்த இயற்கை விவசாயி கணேசன் உயிர்ம முறையில் கடைபிடிக்கப்படும் தொழில்நுட்பங்கள் மற்றும் உயிர்ம இடுபொருள்களான பஞ்சகாவியா, தசகாவியா, மீன் அமிலம் மற்றும் பூச்சி விரட்டிகள் தயாரித்தல் மற்றும் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துக் கூறினார்.

இயற்கை முறையில் சாகுபடி செய்யப்படும் பொருட்களுக்கு மதிப்பு கூட்டி விற்பனை செய்தல் மற்றும் தரம் பிரித்து விற்பனை செய்தல் குறித்து வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி சிவா, விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கினார். இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் ராம்ஜிவன்யா கலந்து கொண்டு உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விக்னேஷ் மற்றும் பூபதி ஆகியோர் சிறப்பாக செய்து இருந்தனர். இப்பயிற்சியில் எண்ணமங்கலம் கிராமப் பகுதியை சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**49. பாதாம் சூப்**

**தேவையான பொருட்கள்**

பாதாம் — 15

பால் — 1 கப்

மிளகு தூள் — ¼ டீஸ்பூன்

வெண்ணெய் — 1 டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை :** பாதாமை ஊறவைத்து தோல் நீக்கி அரைக்கவும். பால், தண்ணீருடன் சேர்த்து கொதிக்கவிட்டு மிளகு, உப்பு சேர்த்து பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# COXBIT, TNAU சார்பில் வேளாண் தொழில்நுட்பம் மற்றும் கல்வித் தொழில்நுட்பத்தில் செயற்கை நுண்ணறிவு பயன்பாடுகள் குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், செப்.26

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) கோயம்புத்தூர், உயிரித் தொழில்நுட்பத் மகத்துவ மையம் (COXBIT) சார்பில், வேளாண் தொழில்நுட்பம் (Agri-Tech) மற்றும் கல்வித் தொழில்நுட்பத்தில் (Edu-Tech) செயற்கை நுண்ணறிவின் (AI) பயன்பாடுகள் குறித்த பயிற்சி நிகழ்ச்சி பல்கலைக்கழக அதிகாரிகளின் பங்கேற்புடன் நடைபெற்றது. நிகழ்ச்சியில் முனைவர் ச.கீதாஞ்சலி வரவேற்புரையாற்றினார்.




முனைவர் ந.செந்தில், இயக்குநர், CPMB&B மற்றும் COXBIT, TNAU, வேளாண்மை, கல்வி மற்றும் நிறுவன நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தி வரும் மாற்றங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். கல்வி நிறுவனங்களில் கற்பித்தல் மற்றும் கற்றல், ஆராய்ச்சி, நிர்வாகச் செயல் முறைகள் மற்றும் தரவுகளின் அடிப்படையிலான முடிவெடுத்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதில் செயற்கை நுண்ணறிவின் பங்களிப்பை அவர் வலியுறுத்தினார். முனைவர் மு.ரவீந்திரன், துணைவேந்தர் பொறுப்பு மற்றும் பதிவாளர், TNAU, நவீன வேளாண்மையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் அதிகரித்து வரும் பங்கை எடுத்துரைத்தார். Bharat-VISTAAR, Kisan e-Mitra மற்றும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) பயிர் காப்பீட்டு இணையதளம் போன்ற முன்னெடுப்புகள் மூலம் பயிர் நலக் கண்காணிப்பு, பூச்சி மற்றும் நோய் கண்காணிப்பு, வானிலை முன்னறிவிப்பு, விளைச்சல் தொடர்பான ஆலோசனைகள், பயிர் காப்பீடு, விவசாயிகளுக்கான சேவைகள் வழங்கப்படுவதை அவர் விளக்கினார்.


இத்தகைய டிஜிட்டல் தளங்கள் மூலம் உரிய நேரத்தில் தகவல்களைப் பெற்று, வேளாண்மை சார்ந்த செயல்பாடுகளில் சிறந்த முடிவுகளை எடுக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

கே.கார்த்திகேயன், Nithilam Tech Pvt. Ltd., செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பயிர் தொழில்நுட்பங்களின் சாத்தியக்கூறுகளை விளக்கினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை சார்ந்த தரவுகள், அறிவு மற்றும் தொழில்நுட்ப வளங்களைப் பயன்படுத்தி, நுண்ணறிவு சார்ந்த வேளாண் ஆலோசனை அமைப்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை அவர் எடுத்துரைத்தார். Bharat-VISTAAR, OpenAI, Microsoft Copilot மற்றும் Google NotebookLM போன்ற செயற்கை நுண்ணறிவு தளங்களைப் பயன்படுத்தி வேளாண் தகவல்களைத் தொகுத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவற்றை விவசாயிகளுக்கான ஆலோசனைகள், பயிர் மேலாண்மை பரிந்துரைகள் மற்றும் முடிவெடுப்பதற்கான ஆதார வளங்களாக மாற்றுதல் குறித்து அவர் விளக்கினார்.

விமல் தர்சன், மென்பொருள் உருவாக்குநர், மற்றும் ராம் பிரசாத் ஆர்., உத்திசார் ஆலோசகர், Home Idea Technologies, HIT Learn App மற்றும் கல்வியில் அதன் பயன்பாடுகள் குறித்து விளக்கினர். வேளாண்மை தொடர்பான குறிப்புகள், கற்றல் பொருட்கள் மற்றும் கல்வி வளங்களை இச்செயலியில் ஒருங்கிணைத்து, மாணவர்களுக்கு கட்டமைக்கப்பட்ட, எளிதில் அணுகக்கூடிய மற்றும் ஊடாடும் கற்றல் உள்ளடக்கங்களை வழங்க முடியும் என்பதை எடுத்துரைத்தனர்.

மேலும், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான அம்சங்கள் மூலம் வேளாண் கருத்துகளை மாணவர்கள் சிறப்பாகப் புரிந்துகொள்ளுதல், தனிப்பயனாக்கப்பட்ட கற்றல், கற்றல் பொருட்களை எளிதில் அணுகுதல் மற்றும் மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டை மேம் படுத்துதல் ஆகியவற்றை ஆதரிக்க முடியும் என விளக்கினர்.

நிகழ்ச்சியின் நிறைவாக, முனைவர் இ.கோகிலாதேவி நன்றியுரை வழங்கி, பல்கலைக்கழக அலுவலர்கள் மற்றும் வளஆளர்களின் மதிப்புமிக்க பங்கேற்பிற்கும், நிகழ்ச்சியின் சிறப்பான செயல்பாட்டிற்கும் நன்றி தெரிவித்தார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நவீன வேளாண்மையில் கொய்மலர் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள்

**கொய் ரோஜா மலர்**

கொய் மலர் உற்பத்தியில் உலக அளவில் ரோஜா முதல் இடத்தை வகிக்கிறது. மேலை நாடுகளில் குளிர் காலங்களில் வெப்ப நிலை மிகவும் குறைந்து காணப்படுவதால் ரோஜா மலர் உற்பத்தி செய்ய முடிவதில்லை. இத்தகைய நாடுகளில் ரோஜா சமவெளிப் பகுதிகளில் கோடை வெப்பம் மிகுதியாக இருப்பதால் மலர் பசுமை இல்லங்களில் வளர்க்கப்படுகிறது. இந்தியாவில் கொய் மலர்களை வளர்த்து பயன் பெற முடியும். பசுமை இல்லங்களில் வளர்ப்பதன் மூலம் மலர்களின் விளைச்சல் பல மடங்கு அதிகரித்து, தரமும் மேம்படுகிறது. பசுமை இல்லங்களில் ஈரப்பதம் 60-75 சதமும், 25-36 டிகிரி சென்டி கிரேட் வெப்ப நிலையும் இருப்பது ரோஜா வளர்ப்புக்கு உகந்தது.

எனவே, பசுமை இல்லங்களை சுற்றிலும் பாலிதீன் தாள்களை அல்லது மெலிதான நிழல் வலைகளை கொண்டு மூடுவதன் மூலம் வெப்ப நிலையைக் குறைக்க முடியும். வெயில் காலங்களில் வெப்பத்தை குறைப்பதற்கும், ஈரப்பதத்தை அதிகரிக்கவும் அடிக்கடி நீர் தெளிப்பான்கள் மூலம் எல்லா இடமும் பரவுமாறு நீர் தெளிக்க வேண்டும். இதன் மூலம் வெப்பத்தை குறைக்க முடியும்.

**இரகங்கள்**

கொய் மலருக்கான ரோஜா இரகங்கள், அதிக மகசூல், நீண்ட வாழ் நாள், தண்டுகள் வளையாமல் நேராக வளரும் தன்மை, முட்கள் இல்லாது இருத்தல், கண்ணைக் கவரும் அழகிய வண்ணம், மிதமான வாசனை, நோய் எதிர்ப்பு சக்தி போன்ற குணங்களை கொண்டிருக்க வேண்டும்.

அவை வாலண்ஸியா, அமோரோசா, ஓசியானா, தாஜ்மஹால், பர்ஸ்ட் ரெட், ரேவல், க்ராண்ட் காலா, கோன்பிட்டி, டினக்கி, விர்ஸீலியா ஆகியவை. தமிழ் நாடு வேளாண்மை பல்கலை கழகத்திலிருந்து ஏற்காடு-1, ஏற்காடு-2, மற்றும் ஏற்காடு-3 என்று மூன்று இரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**கொய் ரோஜா பிரிவுகள்**

1. நீண்ட தண்டுடன் கூடிய ரோஜா மலர்
2. நடுத்தர தண்டுடன் கூடிய ரோஜா மலர்
3. குட்டையான தண்டுடன் கூடிய ரோஜா மலர்
4. ஸ்பிரே ரோஜா மலர்
5. மினியேட்சர் ரோஜா மலர்

**1. நீண்ட தண்டுடன் கூடிய ரோஜா மலர்**

இந்த வகையில் தண்டு நீளம் 60 செ.மீ. லிருந்து 120 செ.மீ. நீளமுள்ளதாக இருக்கும். இந்த வகைக்கு ஏற்ற இரகம் ஹைபிரிட் டீ. இவை வருடத்திற்கு 100 - 150 மலர்களை ஒரு சதுர மீட்டருக்கு கொடுக்க வல்லது.

**2. நடுத்தர தண்டுடன் கூடிய ரோஜா மலர்**

இவ்வகை மலர்கள் 40 - 60 செ.மீ நீளமுள்ள தண்டுகளில் தோன்றும். ஒரு சதுர மீட்டருக்கு 220 மலர்களை கொடுக்கும். புளோரிபாண்டா இரகங்கள் இந்த வகையை சேர்ந்தது.

**3. குட்டையான தண்டுடன் கூடிய ரோஜா மலர்**

30 - 40 செ.மீ. நீளமுள்ள தண்டில் மலர்கள் தோன்றும், ஸ்வீட் ஹார்ட் இரகங்கள் இந்த வகையைச் சேர்ந்தது. இந்த ரகம் ஒரு சதுர மீட்டருக்கு 250 முதல் 350 மலர்களை கொடுக்க கூடியது. இந்த இரக மலர்களின் வாழ்நாள் அதிகமாகும்.

**4. ஸ்பிரே ரோஜா மலர்**

இந்த வகையில் ஒரு தண்டில் நிறைய மலர்கள் கொத்தாக தோன்றும். ஆனால் மகசூல் இந்த இரகத்தில் மிகவும் குறைவே.

**5. மினியேட்சர் ரோஜா மலர்**

இச்செடிகளின் தண்டுகள் 20 லிருந்து 40 செ.மீ. உயரமே இருக்கும். இந்த வகை 500 மலர்களை ஒரு சதுர மீட்டருக்கு உற்பத்தி செய்ய வல்லது. மலர்கள் மிகவும் சிறியவை. இந்த இரகம் தொட்டிகளில் வைத்து வளர்ப்பதற்கு ஏற்றவை.

**நடுதல்**

பசுமை இல்லங்களின் நீள அகலத்திற்கேற்ப பாத்திகள் அமைக்கப்படுகின்றன. பொதுவாக 0.85 மீ அகலத்தில் அமைக்

கப்படுகிறது. செடிகளி இரண்டு வரிசையாக (double row) நடப் படுகிறது. வரிசைக்கு இடையே 0.30 மீ இடைவெளியும் செடிக்கு இடையே 0.25 மீ இருக்க வேண்டும்.

நல்ல வடிகால் வசதியுடைய மண்ணாக இருந்தால் சாதாரண பாத்தியும் குறைந்த வடிகால் வசதியுடைய மண்ணில் 25-30 செ.மீ. உயரம் கொண்ட மேட்டுப் பாத்திகளும், அமைக்க வேண்டும். ஆறு முதல் 18 மாதம் வயதான மொட்டுக்கட்டிய செடிகளை நடவிற்குப் பயன்படுத்த வேண்டும்.

போதிய இடைவெளியில், செடியின் வேர்கள் மடங்காமல் முழுவதுமாக குழிக்குள் இருக்குமாறு நடவு செய்ய வேண்டும். ஒரு சதுர மீட்டர் இடத்திற்கு 5 கிலோ வைக்கோல், 25 கிலோ தொழு உரம், 2 கிலோ மக்கிய தென்னை எரு (Cocopeat) கலந்த கலவையில் செடிகளை நட வேண்டும். அந்த கலவையின் கார அமிலத் தன்மை 5.5 முதல் 6.5 என்ற அளவில் இருக்க வேண்டும்.

**பராமரிப்பு**

பாத்திகளில் செடிகளை நட்டவுடன், மிதமான வெப்பநிலையில் பராமரிக்க வேண்டும். காற்றின் ஈரப்பதத்தைக் கூட்டுவதால் செடிகளின் வளர்ச்சி அதிகமாக இருக்கும். கோடைக் காலங் களில் கோடை வெயிலின் உக்கிரத்தைக் குறைக்க செடிகளின் மீது நீர் தெளிக்க வேண்டும். நடவு செய்தவுடன் பாத்திகளின் ஈரப்பதம் குறையாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பாத்திகளின் இரு பக்கமும் 3 மீட்டர் இடைவெளியில் பெரிய கழி கொண்டோ அல்லது கான்கிரீட் தூணோ அமைத்து 52 ஒருபக்கத் தூண்களையும் தாணில் 30-40 செ.மீ. இடை வெளியில் கம்பிகளைக் கொண்டு இணைக்க வேண்டும்.

இக்கம்பிகளில் செடிகளை படர விடுவதன் மூலம் வளையாத நேரான தண்டில் மலர்களை பெற முடியும். முதன்மைக் குச்சியின் முடிவில் மொட்டுகள் தோன்றியவுடன் அருகினில் அல்லது அதற்கு சற்றுக் கீழ் புறமாக பக்க மொட்டுகள் தோன்றினால் அவற்றை உடனடியாக நீக்கி விட வேண்டும்.

இவ்வாறு, நடவு செய்த 4 வாரங்களுக்குப் பின்னர் அதாவது மொட்டு பட்டாணி அளவு இருக்கும் போது அதனை நீக்க வேண்டும். அவ்வாறு நீக்கிய பின்னர் பக்கக் கிளைகள் ஏதாவது தோன்றினால் அவற்றையும் நீக்கி விட வேண்டும்.

இவ்வாறு செய்த 3 அல்லது 4 வாரங்களில் செடி வளர்ந்து நிற்கும். அப்போது முதன்மைக்குச்சியை கீழ்புறமாக வெட்டி விட்டு தேவையான பக்க கிளைகளை வளர்த்து கொய்மலர் பெற முடியும். முதன்மைக்குச்சியை வெட்டி விடுவதற்குப் பதிலாக வளைத்துக் கட்டியும் பராமரிக்கலாம்.

தகவல் : ***T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.***

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# நெல் சாகுபடியில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ன?



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை ஆங்காங்கு பெய்து வருகிறது. இந்த சூழலில் நெற் பயிரின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், எதிர் பார்க்கும் பூச்சி/நோய் தாக்குதலிலிருந்து பாது காக்கவும் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். அவை என்னென்ன என்பதை இந்த பதிவில் பார்ப்போம்.

### 1) வடிகால் வசதி

அதிகமாக மழை பெய்து வயலில் நீர் தேங்கியுள்ள இடங்களில் தண்ணீரை வடித்து விடவேண்டும். அதிகமாக தண்ணீர் இருந்தால் நடப்பட்ட இளம் நெல்பயிர் (PADDY SEEDLINGS) அழுகி போவதற்கான வாய்ப்புகள் இருக்கும். அந்த மாதிரி இடங்களில் பயிர் எண்ணிக்கை பராமரிக்க அதே வயதுடைய நாற்றுகள் நடலாம் (GAP FILLING). சற்று வயதான நெற்பயிரில் அதிக தூர்கள் இருக்கும் பட்சத்தில் அவற்றை பிடுங்கி பழுதான இடங்களில் நடலாம்.

### 2) மேலுரமிடல்?

மழை இல்லாத போது ஈரப்பதமான நிலத்தில் 22 கிலோ + யூரியா + 18 கிலோ ஜிப்சம் + 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை கலந்து ஒரு நாள் இரவு வைத்திருந்து, மறுநாள் காலையில் இந்த கலவையுடன் 17 கிலோ பொட்டாஷ் உரத்தை கலந்து தூவி நெல்பயிருக்கு விடவேண்டும்.

### 3) இலைவழி தெளிப்பு (FOLIAR SPRAY)

பயிரின் வளர்ச்சியை துரிதப்படுத்த இலைவழியாக 2 கிலோ யூரியாவுடன் ஒரு கிலோ சிங்சல்பேட் கலந்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை/மாலை நேரங்களில் தெளிக்க வேண்டும்.

4) பூச்சி/நோய் பாரமரிப்பு (PEST AND DISEASE MANAGEMENT)

தற்போது நிலவும் மந்தமான சீதோஷ்ண நிலையில், நெல் பயிரில் இலைச்சுருட்டுப்புழு, குருத்து ஈ மற்றும் புகையான், ஆனைக்கொம்பன் ஈ போன்ற பூச்சிகள் தாக்குதல் மற்றும் குலை நோய் (BLAST) தோன்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு வேப்பங் கொட்டை கரைசல் 5% அல்லது புளுபெண்டியாமைட் 20மி.லி அல்லது கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 400 கிராம் இதில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். குலை நோயை கட்டுப்படுத்த பெவிஸ்டின் 100கிராம் கலந்து தெளிக்கலாம். அவ்வப்போது நிகழும சூழலுக்கேற்றவாறு பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

அவசர ஆலோசனைக்கு கிசான் கால் சென்டரை (1800-180-1551) அணுகவும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# வீரிய வேல் மர பயன்பாடு மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்கள்

குறுகிய காலத்தில் அதிக லாபம் தரும் நோக்கில், மேட்டுப் பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்சி நிலையம் மூலம் கத்தி வேல் மற்றும் மாஞ்சியம் வேல் ஆகிய இரு ரகங்களை ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டது 'வீரிய ஒட்டு ரக வேல் மரம்' ஆகும்.

**சாகுபடி தொழில்நுட்பங்கள்**

**கன்றுகள்**

மேட்டுப்பாளையம் வனக்கல்லூரியில் குளோனிங் முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன, கன்றுகளை நடவுக்கு பயன்படுத்த வேண்டும்.

நிலம் மற்றும் நடவு: இது அனைத்து வகையான மண்ணிலும் வளரும் தன்மை கொண்டது. தரிசு நிலமாக இருந்தால் சட்டிக் கலப்பை மற்றும் கொக்கிக் கலப்பையால் உழவு செய்து, ஏக்கருக்கு 5 டன் தொழுவுரம் இட்டு நடவு செய்ய வேண்டும்.

**இடைவெளி :** காகிதக்கூழ் அல்லது எரிசக்திக்காக வளர்த்தால் 6 x 6 அடி இடைவெளியிலும், தடிமரத்திற்காக வளர்த்தால் 12 x 12 அடி இடைவெளியிலும் நடவு செய்ய வேண்டும். 12 அடி இடைவெளியில் ஊடுபயிர்கள் செய்தும் வருமானம் பெறலாம்.

**நீர் மேலாண்மை :** 3 அல்லது 4 நாட்களுக்கு ஒருமுறை, மரத்திற்கு 6 லிட்டர் வீதம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். சொட்டு நீர் பாசனம் அமைப்பது மிகவும் சிறந்தது.

**பராமரிப்பு :** 20 அடி உயரத்திற்கு மேல் வளரும் போது ஆங்காங்கே வளைந்து வளரும் தன்மை கொண்டது. எனவே, மரத்தை நேராக வளர்க்கத் தேவையான இடங்களில் மட்டும் கவாத்து (Pruning) செய்ய வேண்டும். மரங்கள் சாய்வதைத் தடுக்க, காற்றுக் காலம் தொடங்குவதற்கு 6 மாதங்களுக்கு முன்பே முட்டுக்கால் கொடுக்க வேண்டும். பூச்சி மற்றும் நோய்ப் பாதிப்புகள் இதில் மிகக் குறைவு.

**மறுதாம்பு (Coppicing) :** மரத்தை வெட்டிய பின், அடிப் பாகத்தை விட்டுவிட்டால் மீண்டும் துளிர்த்து வளரும். இதன் மூலம் அதிகபட்சம் 2 முறை மறுதாம்பு அறுவடை செய்யலாம்.

**பயன்பாடு :** வீரிய வேல் மரம் பலவிதமான பயன்பாடுகளைக் கொண்டு உள்ளது :

**காகிதக்கூழ் :** ஒரு கன மீட்டருக்கு 550 – 650 கிலோ அடர்த்தி கொண்ட இதில், 70 சதவிகிதத்திற்கும் மேல் சிறப்பான காகிதக்கூழ் கிடைக்கிறது. இதற்காக மரத்தை 3 ஆண்டுகளில் அறுவடை செய்யலாம்.

**எரிசக்தி :** 12 மாதங்களிலேயே மரத்தை வெட்டி, சிறு துகள் களாக்கி நிலக்கரிக்கு மாற்றாகத் தொழிற்சாலைகளில் எரிசக்தி யாகப் பயன்படுத்தலாம்.

**தடிமரம் & பலகைகள் :** 6 முதல் 12 ஆண்டுகளில் 24 அங்குல சுற்றளவு வந்தவுடன் தடிமரத்திற்குப் பயன்படுத்தலாம். இதன் தரம், வேலைப்பாட்டுத் திறன் மற்றும் நிறம் தேக்கு மரத்திற்கு இணையாக உள்ளது. எம்.டி.எஃப் (னிம்ய்) துகள் பலகைகள் செய்யவும் இது உகந்தது.

**மகசூல் மற்றும் சந்தை நிலவரம்**

**மகசூல் :** சரியான முறையில் பராமரித்தால், ஒரு ஏக்கருக்கு 60 டன் (ஹெக்டேருக்கு 100 டன்) வரை மகசூல் கிடைக்கும்.

இவ்வாறு விவசாயிகள் பயனடையுமாறு தாரமங்கலம் வேளாண்மை துறை மூலம் கேட்டுக்கொள்கிறோம்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# காளான் விதை உற்பத்தியில் திறன் சார்ந்த பயிற்சி



கோயம்புத்தூர், செப்.26

தற்போதைய காலநிலை மாற்றச் சூழ்நிலை, குறைந்து வரும் வேளாண் நிலப்பரப்பு மற்றும் நீர்ப்பற்றாக்குறை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும் போது காளான் வளர்ப்பு என்பது பெண்கள் இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுவதற்கான நிலையான தொழில்முயற்சியாகும். காளான் வளர்ப்பு விவசாயிகளுக்கு கூடுதல் வருமானத்தைப் பெற்றுத் தரும் வகையில் ஒருங்கிணைந்த பண்ணைய முறைக்கு மிகவும் பொருத்தமானதாகும்.

காளான் வளர்ப்பை மேற்கொள்வதன் மூலம் வைக்கோல் போன்ற வேளாண் கழிவுகளை புரதச்சத்து நிறைந்த காளான் காய்கறியாக மாற்ற முடியும். நமது நாட்டின் மொத்த காளான் உற்பத்தியில் சுமார் 81 சதவீதம் தமிழ்நாட்டில் மட்டுமே பங்களிக்கின்றது. இருப்பினும் நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்ய அதிக அளவில் காளான்களை உற்பத்தி செய்வதற்கு தரமான காளான் விதை தேவை அதிகமாக உள்ளது. இந்த இடைவெளியை நிரப்பும் வகையில் தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) காளான் விதை மற்றும் காளான் உற்பத்தி தொடர்பான மூன்று நாள் திறன் சார்ந்த பயிற்சியை (23.09.26 முதல் 25.09.26) ஏற்பாடு செய்தது. இப்பயிற்சியில் கோயம்புத்தூர், வேலூர், சென்னை, திருவள்ளூர், தஞ்சாவூர், கரூர், சேலம், தர்மபுரி, திருப்பூர், திருவண்ணாமலை, கேரளா மற்றும் பெங்களூரிலிருந்தும் மொத்தம் 31 பேர் பங்கேற்று நேரடி செய்முறை அனுபவத்தைப் பெற்றனர். பயிற்சியாளர்கள் ஆர்வத்துடன் ஊடகத் தயாரிப்பு, காளான்களின் விதை வளர்ப்பு, காளான் விதை உற்பத்தி, வைக்கோல் பதப்படுத்துதல் மற்றும் காளான் படுக்கை தயாரித்தலில் ஈடுபட்டனர்.

மேலும் தங்களது தொழில் முயற்சியை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் காளானின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களின் உற்பத்தி பற்றிய தேவையான உத்திகள்மற்றும் திட்டங்களை வேளாண் வணிகக் காப்பக மையம் மற்றும் அறுவடை பின் சார்ந்த மையத்தின் மூலமாக அறிந்து கொண்டனர். இப்பயிற்சியின் அம்சங்களைப் பயிற்சி நோயியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் கு.திரிபுவனமாலா மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர் ப.மகாலட்சுமி ஆகியோர் வழங்கினர். முனைவர் மூ.சாந்தி, இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், முனைவர் க.அங்கப்பன் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் ஆகியோர் பயிற்சியாளர்களுக்கு தொடர்ந்து தேவையான ஆதரவும் வழிகாட்டுதலும் வழங்கப்படும் என உறுதியளித்தனர். திருச்சியைச் சேர்ந்த அவ்வை காளான் பண்ணை நிறுவனத்தின் தொழில்முனைவோர் பிரியதர்ஷினி மற்றும் கோயம்புத்தூரைச் சேர்ந்த உயிர் வளம் இயற்கை காளான் நிறுவனத்தின் ஹேமப்பிரியா ஆகியோருடன் பயிற்சி-யாளர்களுக்கிடையே கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. அவர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு காளான் விதை உற்பத்தி, சிப்பிக் காளான் மற்றும் பால் காளான் உற்பத்தி மற்றும் மதிப்புக்கூட்டல் மூலம் காளான் தொழில் முயற்சியைத் தொடங்க பயிற்சியாளர்களை ஊக்கப்படுத்தினர்.

## அட்மா திட்டத்தின் மூலம் உழவர்களுக்கு 'பண்ணை இயந்திர மயமாக்கல்' – தொழில்நுட்ப பயிற்சி



ஈரோடு, செப்.26

ஈரோடு மாவட்டம், தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் ஏளூர் கிராமத்தில் பண்ணை இயந்திரமயமாக்குதல் குறித்த பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் புள்ளப்பநாயக்கன் பாளையம், சென்றாயம் பாளையம் கிராமத்தை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட உழவர்கள் கலந்துகொண்டனர். இப்பயிற்சியை வேளாண்மை உதவி இயக்குநர் அமுதா தலைமையேற்று தொடங்கி வைத்து வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய மற்றும்

மாநிலத் திட்டங்கள் குறித்தும் இயற்கை விவசாயம் செய்வதன் மூலம் மண் வளம் பாதுகாப்பதுடன் இடுபொருள் செலவுகளைக் குறைக்க முடியும் எனவும் தரமான உற்பத்தியை பெறமுடியும் எனவும் கூறினார்.

வேளாண்மை அறிவியல் நிலைய வேளாண் பொறியாளர் ஜான்பிரபாகர், இப்பயிற்சியில் கலந்துகொண்ட உழவர்களுக்கு தேவையான நவீன இயந்திரங்கள் பற்றியும் அதை எவ்வாறு பயன்படுத்துவது குறித்தும் தெளிவாக கூறினார். மேலும் நவீன இயந்திரங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விவசாயம் செய்து வரும் உழவர்களின் விபரங்களையும் தெரிவித்தார். புதிய பந்தல் காய்கறி செய்வது பற்றியும் தெளிவாக எடுத்துறைத்தார்.

தோட்டக்கலை உதவி இயக்குநர், அருண் தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய மற்றும் மாநில அரசின் மானியத்திட்டங்கள் குறித்தும் குறிப்பாக மஞ்சள், வாழை, காய்கறி பயிரிடும் உழவர்களுக்கு வழங்கப்படும் மானியத் திட்டங்கள் குறித்தும், நுண்ணீர் பாசன மானியத் திட்டங்கள், பயிர்காப்பீடு திட்டங்கள் பற்றியும் தெளிவாக கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் சு.அரவிந்தன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரா.மணிகண்டன் மற்றும் காவேரி ஆகியோர் செய்திருந்தனர்.

# நம்பியூர் வட்டாரத்தில் விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, செப்.26

ஈரோடு மாவட்டம், வேளாண்மை துறை வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் நம்பியூர் வட்டாரம் கரட்டுப்பாளையம் கிராமத்தில் விவசாயிகள் பயிற்சி துணை வேளாண்மை அலுவலர் வெங்கிடு சாமி தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை துறையின் சார்பாக வெங்கிடுசாமி, வேளாண்மை துறையில் செயல்படுத்தப் படும் திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கினார். இதனைத் தொடர்ந்து உதவி தோட்டக்கலை அலுவலர் ஜனார்த்தனன்,

தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கினார். மேலும் தரனேஷ், ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் பொருட்கள் இருப்பு வைத்தல் மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் தொடர்பான விளக்கங்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

கலையரசி, புகையிலை கட்டுப்பாட்டு ஆய்வாளர், கலந்து கொண்டு புகையிலையினால் ஏற்படும் தீமைகளை பற்றி விரிவாக விளக்கினார். இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# ஒலக்கூர் கீழ்பாதி கிராமத்தில் மண்வளம், ஊட்டச்சத்து மேலாண்மை பயிற்சி



விழுப்புரம், செப்.26

விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் வட்டாரம், கீழ்பாதி கிராமத்தில் வேளாண்மைத் துறை மற்றும் ஆத்மா திட்டம் சார்பில் விவசாயிகளுக்கு மண்வளம் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சிக்கு துணை வேளாண்மை அலுவலர் சின்னத்துரை தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சிவசண்முகம் வரவேற்றார்.

வேளாண் அறிவியல் நிலையம், திண்டிவனம் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜமுனா, மண் பரிசோதனையின் அடிப்படையில் பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகளை வழங்குதல், பேரூட்டச்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்துகளின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

மண் வளத்தை மேம்படுத்த தொழு உரம், பசுந்தாள் உரம், இயற்கை மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும். மண்ணின் தன்மைக்கேற்ப உரங்களை தேர்வு செய்து, தேவைக்கு அதிகமாக இரசாயன உரங்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறையை கடைப்பிடிப்பதன் மூலம் மண் வளத்தை பாதுகாப்பதுடன், உரச் செலவைக் குறைத்து பயிர் மகசூலை அதிகரிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.

உதவி வேளாண்மை அலுவலர் கோபிநாத், வேளாண் திட்டங்கள் மற்றும் மானியத் திட்டங்கள் குறித்து விளக்கினார். சிறு, குறு விவசாயிகள் 100 சதவீத மானியத்தில் தெளிப்பு நீர்ப்பாசனம் மற்றும் சொட்டு நீர்ப்பாசன வசதிகளை அமைத்து பயன்பெற வேண்டும் என கேட்டுக்கொண்டார். ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சிட்டிபாபு, வீராசாமி ஆகியோர் செய்திருந்தனர். இதில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# தோட்டக்கலைப் பயிர்களில் அங்கக வேளாண்மை குறித்த கண்காட்சி மற்றும் தொழில்நுட்பக் கருத்தரங்கம்

புதுக்கோட்டை, செப்.26

புதுக்கோட்டை மாவட்டத்தில் மண் வளம் காப்போம், இயற்கை வளங்களைப் பாதுகாப்போம், பாதுகாப்பான உணவை உற்பத்தி செய்வோம் என்ற உயரிய நோக்கத்துடன், பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், மாவட்ட அளவிலான தோட்டக்கலைப் பயிர்களில் அங்கக வேளாண்மை குறித்த கண்காட்சி மற்றும் தொழில்நுட்பக் கருத்தரங்கம் 23.09.26 புதன்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது.



இக்கருத்தரங்கிற்கு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுந்தர மகாலிங்கம், தலைமை தாங்கி, பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம், முக்கியத்துவம் மற்றும் விவசாயிகளுக்கான பயன்கள் குறித்து விரிவாக எடுத் துரைத்தார். வேளாண்மை அறிவியல் நிலையம், வம்பன், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம.தமிழ்ச் செல்வன் வாழ்த்துரை வழங்கினார். அப்போது, அங்கக வேளாண் மையின் முக்கியத்துவம், மண் வளப் பாது காப்பு, உயிர் உரங்களின் பயன்பாடு, இயற்கை இடுபொருட்கள், பாதுகாப்பான உணவு உற்பத்தி மற்றும் நிலையான வேளாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும், இக்கருத் தரங்கு விவசாயிகள் நவீன மற்றும் நிலையான வேளாண் தொழில் நுட்பங்களை அறிந்து, அவற்றை தங்களது வயல்களில் நடைமுறைப் படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பாக அமைந்து உள்ளதாக தெரிவித்தார்.

முனைவர் இரா.இராம்ஜெகதீஷ் (பயிர் நோயியல்) அங்கக வேளாண்மை முறையில் தோட்டக்கலைப் பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்களை ஒருங்கிணைந்த முறையில் மேலாண்மை செய்வது குறித்து தொழில்நுட்ப உரை ஆற்றிதுடன் விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இக்கருத்தரங்கில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குடுமியான்மலை சார்ந்த விஞ்ஞானிகள், தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையம், வம்பன் சார்ந்த விஞ்ஞானிகள் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, தங்களது தொழில்நுட்ப கருத்துகளை விவசாயி களுடன் பகிர்ந்து கொண்டனர். இக்கண்காட்சியில் அங்கக இடுபொருட்கள், உயிர் உரங்கள், உயிரியல் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள், வேளாண் தொழில்நுட்பங்கள், செயல் விளக்கங்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டன. இவை விவசாயிகள் தொழில்நுட்பங்களை நேரடி யாகக் கண்டு, அவற்றின் பயன்பாடு குறித்து அறிந்து கொள்வதற்கு பயனுள்ளதாக அமைந்தன. மேலும், இந்நிகழ்ச்சியில் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு, அங்கக வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் நிலையான உற்பத்தி தொடர் பான தொழில்நுட்பங்களை அறிந்து பயனடைந்தனர். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, விவசாயி களுக்கு பயனுள்ள பழக்கன்றுகள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியை மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் அ.ரேகா சிறப்பாக ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தார். நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து விஞ்ஞானிகள், அலுவலர்கள் மற்றும் விவசாயிகளின் ஒத்துழைப்புடன் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது.

# இயற்கை விவசாய பயிற்சி



விழுப்புரம், செப்.26

விழுப்புரம் மாவட்டம், காணை வட்டாரம், மேல் காரணை கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) பாலமுருகன் தலைமையில் வேளாண்மை துறை, வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் இயற்கை விவசாயம் பற்றி பயிற்சி நடத்தப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் விஜய சாரதி வரவேற்புரை அளித்தார். இப்பயிற்சிக்கு முன்னோடி இயற்கை விவசாயி மோட்சநாதன் இயற்கை விவசாயம் சம்பந்தமான தன் அனுபவங்களையும், பஞ்சகாவியம், தசகாவியம், மீன் அமிலம், பூச்சி விரட்டி மற்றும் மண்புழு உரம் போன்ற இயற்கை இடுப் பொருட்கள் தயாரிப்பதற்கான விரிவான பயிற்சி வழங்கினார். மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் (பொ), வேளாண் திட்ட பணிகள் மற்றும் வேளாண் மானியங்கள் பற்றிய விவரங்களை கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் சதீஷ் நன்றி கூற, ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சிவானந்தம் செய்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# TNAU மற்றும் SVPISTM இடையே கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்



கோயம்புத்தூர், செப்.26

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), மத்திய ஜவுளித் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி நிறுவனமான சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச ஜவுளி மற்றும் மேலாண்மை பள்ளி (SVPISTM), கோயம்புத்தூர் உடன் பட்டுப்புழுவியல் மற்றும் ஜவுளித் துறைகளில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை வலுப்படுத்து வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டு உள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பதிவாளர் மற்றும் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் மு.ரவீந்திரன் மற்றும் SVPISTM, இயக்குநர் முனைவர் பிஸ்வரஞ்சன் கோஷ் ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வில் வனவியல் முதன்மையர் முனைவர் அ. பாலசுப்ர மணியன், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர்ப் பாதுகாப்பு ஆய்வு மைய இயக்குநர் முனைவர் மு.சாந்தி மற்றும் இரு நிறுவனங்களின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதைத் தொடர்ந்து, SVPISTM, கோயம்புத்தூரின் இயக்குநர் முனைவர் பிஸ் வரஞ்சன் கோஷ் மற்றும் அவரது குழுவினர், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர்ப் பாதுகாப்பு ஆய்வு மைய இயக்குநர் முனைவர் மு.சாந்தி, பட்டுப்புழுவியல் துறைப் பேராசிரியரும் தலைவருமான முனைவர் கே.ஏ.முருகேஷ், உதவிப் பேராசிரியர் முனைவர் பி.பிரியதர்ஷினி மற்றும் பட்டுப்புழுவியல் துறை குழு வினருடன் பட்டு பதப்படுத்துதல் மற்றும் ஜவுளித் தொழில்நுட்பப் பயன்பாடுகள் தொடர்பான கூட்டு நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினர்.

இந்த ஒத்துழைப்பு, பட்டுப்புழுவியல் மாணவர்கள் பட்டு பதப்படுத்துதல், ஜவுளித் தொழில்நுட்பப் பயன்பாடுகள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் உருவாக்கம் ஆகியவற்றில் நடைமுறை அறிவையும் நேரடி பயிற்சி அனுபவத்தையும் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கும். மேலும், மேலும், SVPISTM நிறுவனத்தின் நவீன ஜவுளி ஆய்வக வசதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி மற்றும் நடைமுறைப் பயிற்சி மேம்படும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மாணவர்களின் அறிவுத்திறன் மேம்பாடு, ஆசிரியர் மற்றும் விஞ்ஞானிகளின் கலந்துரை யாடல், கூட்டு ஆராய்ச்சி, தொழில்நுட்ப நிபுணத்துவப் பரிமாற்றம் மற்றும் நிறுவனங்களுக்கிடையேயான இணைப்பு களை மேலும் வலுப்படுத்தும். மேலும், தொழில்நுட்பப் பரிமாற்றம், திறன் மேம்பாடு மற்றும் பட்டுப்புழுவியல் மற்றும் ஜவுளித் துறைகளில் புதுமையான பயன்பாடுகள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும். இக்கூட்டாண்மை கல்வி நிறுவனங் களுக்கு இடையேயான இணைப்பை வலுப்படுத்துவதுடன், கல்வி, ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாடு சார்ந்த கூட்டு நடவடிக்கைகளுக்கு சிறந்த தளத்தை உருவாக்கும்.

## ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணி கட்டுப்பாடு குறித்த செயல் விளக்கம்



புதுக்கோட்டை, செப்.26

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் (ICAR) புது தில்லியின் கீழ் புதுக்கோட்டை மாவட்டம் வம் பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணி கட்டுப்பாடு குறித்த செயல் விளக்கத்திற்கான இடுபொருள் விநியோகம் 23.09.26 புதன்கிழமை அன்று வழங்கப்பட்டது. இதில் வேளாண் அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம. தமிழ்ச்செல்வன், ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணி கட்டுப்பாடு முக்கியத்துவத்தை பற்றி கூறினார். முனைவர் வ.பா.இராகவேந் திரன் (கால்நடை அறிவியல்) Megatex Spray என்பது ஆடுகள் மற்றும் பிற கால்நடைகளில் காணப்படும் வெளிப்புற ஒட்டுண்ணி களை கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் ஒரு மூலிகை அடிப்படையி

லான மருந்து என்றும் அது குறிப்பாக ஆடுகளில் உண்ணி, பேன் மற்றும் சொதில் பூச்சிகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்த உதவுகிறது குறித்து விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இந்த செயல் விளக்க நிகழ்ச்சியில் 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இதில் விவசாயிகளுக்கு ஆடுகள் மற்றும் பிற கால்நடைகளில் காணப்படும் வெளிப்புற ஒட்டுண்ணிகளை கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் ஒரு மூலிகை அடிப்படையிலான மருந்து (Megatex Spray) வழங்கப்பட்டது. இந்த ஏற்பாடுகளை தே.அமுல்ராஜ், திட்ட உதவியாளர் (கணினி) சிறப்பாக செய்திருந்தார்.